அசல்

30.11.06. பொன்னம்பலம்.
அசல்-1 நகல்-1

253
64

த.ப.N'
P. 345-352

திருவனந்தபுரம்,
உ. 30-11-06.

மாட்சிமையும் மகிமையும் தங்கிய ஐயர் அவர்கள் சமுகத்தில் பொன்னம்பலம் விண்ணப்பம்.

நான் சிறிதுகாலம் ரஜா எடுத்துக்கொண்டு புண்ணியஸ்தலங்களைத் தரிசிப்பதில் உபயோகித்து இப்பொழுது திருவனந்தபுரம் வந்திருக்கின்றேன். 'திருவிளையாடல் புராணம்' புதுப்பிரதி வந்து சேர்ந்தன. ஸர்க்கார் வேலைத் தோரணையில் என்னுடைய இலாகாவில் பல நூதன ஏற்பாடுகளும் மாற்றங்களும் செய்ய நேர்ந்தமையால் அந்தப்பரபரப்பில் தங்களுக்கு மறுபடி எழுத வசதியில்லாமற் போயிற்று. தங்களுடைய கடிதங்கள் இங்கே வராமலும் என்னுடையவை அங்கே வராமலும் இருந்த போதிலும் தங்களுடைய ஞாபகமும் மகிமைகளும் என்னை விட்டு நீங்குவனவல்லவே.

தயவுசெய்து அனுப்பிவைத்த புஸ்தகங்கள் இரண்டுக்கும் விலை எவ்வளவு? அந்த விபரம் எழுத்திலோ புஸ்தகத்திலோ விளங்கவில்லை. இன்னும் (கா) ஆறாமதி என் மேல்விலாசத்துக்கு அனுப்பித்தரத் தயவுசெய்தல் வேண்டும். இவ்விடத்தில் விருப்பங்கொண்டிருக்கும் தமிழ் நண்பர்களுக்கு அவற்றைக் கொடுத்துத் தொகையைத் தாமதியாமல் அனுப்புவேன்.

இப்போது அச்சியற்றிவரும் "சீவகசிந்தாமணி" என்ன பாகம் எதுபரியந்தம் வெளியிருக்கின்றது? இன்னும் எவ்வகை வே. நூல்களில் முயற்சி நடந்துவருகின்றது?

அசல்

64

30.11.06. பொன்னம்பலம்.
அசல்-1 நகல்-1

இடையில் வரு வார்த்தை: இவிடம் காலேஜ்
பிரதம பண்டிதர் காலஞ்சென்று போகவே அந்
த இடம் காலியாயிருக்கிறதைத் தெரிவித்தும்
தங்கள் பேரில் எங்கள் ஞாபகம் சதா நாட்
டப்பட்டிருப்பதாவும் நமது ஐயரவர்களுக்கு
நமது காலேஜ் வருகால் பொருந்துமா" என்
னவிதமாய் நானும் நமது திருவனந்தபுரம் சிநே
கிதர்களும் பேசிக்கொண்டோம். எவ்வழிக்
காயினும், எங்கள் பக்தியில் தாங்கள் வரப்
பெறும் மங்களம் கிட்டுமாயின் நாங்கள் எவ்
வளவு பாக்கியசாலிகளாயிருப்போம்!
இந்த விதப் பேராக் கோரிக்கையினையும்
பற்றுக்கோடு நிமித்தமும் எமது கருத்துக
ளில் உதித்த இந்த ஆசையைக் கடிதம்
வாயிலாய்த் தெரிவிக்க எண்ணினனே
யே அந்தஸ்தானம் எவ்வழிக்கும் தங்களுக்
குக் குறைவுபட்டதாகவே எனக்கும் ஏனை
யோருக்கும் புலப்பட்டிருக்கின்றது.

புதைந்துகிடந்த அரும்பெரு நூல்க
ளை எம்மனோர் எளிதில் வாசித்தும் உய்த்
துணர்ந்தும் பேறுமாறு தாங்கள் எடுத்துக்
கொண்ட பெருமுயற்சி என்றும் சலிப்
படுவதாக. தாங்கள் தென்மொழி விஷயத்
தில் எடுத்துக்கொண்ட சிரத்தையோடு தமி
ழுலகம் முழுவதும் புதுப்பிக்கப்பெற்று இது
தங்களுக்கு அடிமையும்பட்டாய்விட்
டது. நல்லின ஞாலத்தும் காலத்தும்
தன்னைத்தானே பதிப்பித்துக்கொள்ளும்.
ஆகையால் தமிழராது பின்சந்ததிகளுக்கி
டையும் தங்களைப் பற்றிய உபகாரசிந்தை

அசல்

30.11.06. பொன்னம்பலம்.
அசல்-1 நகல்-1

253 64

கிளப்பப்பட்டாய்விட்டது. முன்னால்களை
விளக்குவோர் முன்னோர்களது சிந்தை செ
யல்களை விளக்குகின்றனர். மனிதன் தன்
முன்னோருவத்தை உய்த்துணரில் தனது பின்
னோருவத்தைச் சுலபமாய் ஏற்படுத்திக்கொள்
ளுவான். அதிலும் தமிழ்நூல் அரங்கத்
தில் வசியப்படாத மனிதர்கள் இல்லை. தமி
ழைப் போஷிப்பிக்கும் கருமம் தமிழர்களுக்
கைதூக்கும் புண்ணியத்தொடொத்துளது.
ஆகையால் சகல சீர்சிறப்புகளொடிலங்கிய
ன தமிழின் முன்னூட்டுகளை உருகைப்படுத்
திய தங்களுக்கு "மஹா மஹா உபாத்தியாயர்"
என்று இந்திய கவர்ன்மென்டார் பிரக்கி
யாதி சூட்டியது பெருமையே. ஆயினும்
என்போலிகளுக்கு ஒரு அபிப்பிராயபேதம்
உண்டு. அதாவது தங்களுக்கு அவ்வர
சாங்கத்தார் "மஹா மஹா உத்தமர்" என்
னன்னும் பேர் சூட்டியிருத்தல் [illegible] புஸ்தக
நூலின் வழியாய் மனதும் மனதின் [illegible]யாய்
வருக்கமும் வருக்கம் வாய்த்தோருயர்வும்
மனிதர்களுக்குப் பலிப்பது இல்லபாகையால்
அழகிய நூல்களில் கருத்தான்றவைகள்
அழகிய நாட்டு நிலையில் கருத்தான்றாகின்
னார். அனுபவத்தில், ஆங்கிலேயர்ச்
[illegible] ஆங்கிலேய மொழியனையார்ச்சிலே
யன்றி வேறில்லை, [illegible]
[illegible] தமிழ்களுக்கும் [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

அசல்

30.11.06. பொன்னம்பலம்

அசல் -1 நகல் -1

64

பொருட்டு அகிலகாரணர் அருள்புரிவாராக!
முன் வாழ்ந்து வளமை பெற்றிருந்த தமிழ் மன
தைப், பின் தாழ்ந்து தளர்ந்திருக்கும் தமிழ்ம
னதுக்கு உருவகப்படுத்திக் காட்டும் ஆற்
றல் பெறாற்றல. அந்தப் பெருதவியைத்
தங்கள் பங்குக்கென்று சுமலவல்லபர் வைத்
திருந்தது கணிசமே. தங்களைப் போலப்
பத்துப்பேர் பெத்துழைப்பாராயின் எவ்வள
வு சீக்கிரத்தில், தளர்ந்து தயங்கும் தமிழு
டல் உயிரும் உறுதியும் பெறும்? யான்
சொல்லயாதுளது? கடிதத்தை நீட்டித்
துயக்கஞ்சி இத்துடன் நிறுத்துகின்றேன்.
நீடிய ஆயுளும் நிலை பெற்ற சுகதிடமும்
சர்வேஸ்வரர் தங்களுக்கு அளிப்பாராக!
தமிழ் மொழியை உயிர்ப்பிக்க வேறு வழி
வாய்ப்புகளில்லை.

யோருக்கும் [illegible]ன் உண்மை மறவாதிருக்கும் மனநி
லைக்கு [illegible] பண்டு இவ்வப்போது வெளிப்படுத்
தப்படும் [illegible] பெரு நூல் புதையல்களை
னைக்குத் த[illegible]றுடல் அளித்துதவும் அருந்
தனயக்கும் நோன்புற்றிருக்கின்ற

[illegible signature]

இடம் வந்திருக்கும் புருசிரேஷ்ட
வித்வ சிரோமணியாகிய மிஸ்றர் [illegible]
([illegible]) என்பவர்களைப்பற்றி தேசங்கள்
கேட்டிருக்கிறோம். அனேக பாஷைகளில்
[illegible] யும் [illegible] நாடியும் இராங்
நிர்ணயத்திய [illegible] அவர்கள் வந்தவெற்றி
களுக்கு மகிழ்ச்சியோடனும்
பெருமிதத்[illegible] [illegible]

நகல்

உ

திருவனந்தபுரம்
10-11-06

மாட்சிமையும் மகிமையும் தங்கிய ஐயர் அவர்கள் சமுகத்தில் பொன்னம்பலம் விண்ணப்பம்.

நான் சிறிது காலம் ஏகாந்தத்துக்கொண்டு புண்ணியஸ்தலங்களைத் தரிசிப்பதில் உபயோகித்து இப்போது திருவனந்தபுரம் வந்திருக்கின்றேன். திருவிளையாடற் புராணம் புதுப்பிரதி 2-ம் வந்து சேர்ந்தன. ஸர்க்கார் வேலைத் தொந்தரையில் என்னுடைய இலாகாவில் பல நூதன ஏற்பாடுகளும் மாற்றங்களும் செய்ய நேர்ந்தமையால் அந்தப் பரபரப்பில் தங்களுக்கு மறுபடி எழுதவசதி இல்லாமற் போயிற்று. தங்களுடைய கடிதங்கள் இங்கே வராமலும் என்னுடையவை அங்கே வராமலும் இருந்த போதிலும் தங்களுடைய ஞாபகமும் மகிமைகளும் என்னை விட்டு நீங்குவனவல்லவே

தயவு செய்து அனுப்பிவைத்த புத்தகங்கள் இரண்டுக்கும் விலை எவ்வளவு! அந்த விவரம் எழுத்திலோ புத்தகத்திலோ விளங்கவில்லை. இன்னும் (கா) ஆறு பிரதி என் மேல்விலாசத்துக்கு அனுப்பத் தயவு செய்தல் வேண்டும். இவ்விடத்தில் விருப்பங் கொண்டிருக்கும் தமிழ் நண்பர்களுக்கு அவற்றைக் கொடுத்துத் தொகையைத் தாமதியாமல் அனுப்புவேன்.

இப்போது அச்சியற்றி வரும் ஜீவக சிந்தாமணி இரண்டாம்பாகம் எதுபரியந்தம் நிறைவேறியிருக்கின்றது? இன்னும் எவ்வகை வேறு நூல்களில் முயற்சி நடந்து வருகின்றது? இவையறிய [illegible].

இவ்விடம் காலேஜ் பிரதம தமிழ்ப்பண்டிதர் காலஞ் சென்று போகவே அந்த இடம் காலியாயிருக்கிறதை உத்தேசித்தும் தங்கள் பேரில் எங்கள் ஞாபகம் சதா நாட்டப்பட்டிருப்பதாலும் "நமது ஐயரவர்களுக்கு நமது காலேஜ் ஒருகால் பொருந்துமா" என்றவிதமாய் நானும் நமது திருவனந்தபுரம் சிநேகி

நகல்

தார்களும் பேசிக்கொண்டோம். எவ்வழிக்கா
யினும் எங்கள் மத்தியில் தாங்கள் வரப்பெறும்
மங்களம் கிட்டுமேயின் நாங்கள் எவ்வளவு
பாக்கியசாலிகளாயிருப்போம்? இந்தவாறும்
பொதுக் கோரிக்கையினாலும், பற்றுக்கோடு
நிமித்தமும் எமது கருத்துகளில் உதித்த இந்த
ஆசையைக் கடிதவாயிலாய்த் தெரிவிக்க
எண்ணினேனே தவிர அந்தஸ்தானம்
எவ்வழிக்கும் தங்களுக்குக் குறைபட்டதா
கவே எனக்கும் எனையோருக்கும் புலப்பட்
டிருக்கின்றது
புதைந்து கிடந்த அரும்பெரு நூல்களை
எம்மனோர் எளிதில் வாசித்துத் துணர்ந்தும்
தேறுமாறு தாங்கள் எடுத்துக்கொண்ட
பெருமுயற்சி என்றும் சபலப்படுவதாக.
தாங்கள் தென்மொழி விஷயத்தில் எடுத்துக்
கொண்ட சிரத்தையோடு தமிழுலகம் முழு
வதும் புதுப்பிக்கப்பெற்று அது தங்களுக்கு
அடிமையும் பட்டாய் விட்டது.. நல்வினை
ஞாலத்தும் காலத்தும் தன்னைத் தானே பதி
ப்பித்துக் கொள்ளும். ஆகையால் தமிழ
து பின் சந்ததிகளுக்கிடையும் தங்களைப் பற்
றிய உபகார சிந்தை கிளப்பப் பட்டாய் விட்
டது. முன்னூல்களை விளக்குவோர் முன்
னோர்களது சிந்தை செயல்களை விளக்குகி
ன்றனர். மனிதன் தன் முன்னுவைத்தை உய்த்
துணரின் தனது பின்னுவைத்தைச் சுலப
மாய் ஏற்படுத்திக் கொள்ளுவான். அதிலும்
தமிழ் நூல் அரங்கத்தில் வசியப்படாத மன
துகளில்லை. தமிழைப் போஷிப்பிக்கும்
தருமம் தமிழர்களைக் காக்கும் புண்ணி
யத்தோடொத்துளது. ஆகையால் சகல
சீர் சிறப்புக்களோடும் கூடின தமிழின் முன்
னேட்களை உருவகப்படுத்திய தங்களுக்கு
"மஹாமஹோபாத்தியாயர்" என்று இந்திய
கவர்ன்மென்ட் பாரக்கியாதி கூட்டியது
பெருமையே. ஆயினும் என் போலிகளுக்
கு ஒரு அபிப்பிராய பேதமுண்டு. அதாவது
தங்களுக்கு அவ்வரசாங்கத்தார் "மஹா
மஹோ உத்தமர்" என்றன்றோ பேர் சூட்ட

நகல்

யிருத்தல் வேண்டும், நூலின் வழியாய்
மனதும், மனதின் வழியாய் ஒழுக்கமும் ஒ
ழுக்கம் வாயிலாய் உயர்வும் மனிதர்களுக்கு
ப்பலிப்பது இயல்பாகையால், அழகிய நூல்
களில் கருத்தூன்றுவோர் அழகிய நாட்டு
நிலையில் கருத்தூன்றுகின்றனர். அநுபவ
த்தில் ஆங்கிலயுயர்ச்சி ஆங்கில
மொழியினுயர்ச்சியே யன்றி வேறில்லை.

தமிழை வளர்க்கும் நிலைமை பற்றித்
தலையிடுவோரெல்லாம் என் போல்
தொழுதற்குரியராயிருக்கின்றனர்

பொருட்டு அகிலகாரணர் அருள்புரிவாராக.
முன் வாழ்ந்து வளமை பெற்றிருந்த தமிழ்
மனதைப் பின் தாழ்ந்து தளர்ந்திருக்கும்
தமிழ் மனதுக்கு உருவகப்படுத்திக் காட்
டும் ஆற்றல் பேராற்றலே. அந்தப் பெரு
விளைவைத் தங்கள்பால் கண்டு சருவவல்
லபர் வைத்திருந்தது கண்டேமே. தங்
களைப் போலப் பத்துப் பேர் ஒத்துழைப்பா
ராயின் எவ்வளவு சீக்கிரத்தில் தளர்ந்து
தயங்கும் தமிழுடல் உயிரும் உறுதியும் பெறும்
யான் சொல்லயாதுளது? கடகத்தை நீட்
டித்ததுக்கருசி இத்துடன் திருத்துகின்றேன்
நீடிய ஆயுளும் நிலை பெற்ற சுகதேகமும் ஸர்
வேச்வரர் தங்களுக்கு அளிப்பாராக. தமிழ்
மொழியை உயிர்ப்பிக்க வேறு வழிவாய்ப்
புக்களில்லை.

என்னை மறவாதிருக்கும் மனநிலைக்கு
அவ்வப்போது வெளிப்படுத்தப்
படும் அரும் பெரும் நூல் புதையல்களை
எனக்குத் தவறாமல் அளித்துதவும் அருந்
தயைக்கும் நோன் புற்றிருக்கின்ற

நா. பொன்னம்பலம்

இவ்விடம் வந்திருக்கும் ஒரு பெரும் த
த்துவ சிரோமணியாகிய மிஸ்டர் பிரிட்டோ
(Britto) என்பவர்களைப் பற்றித் தாங்கள் கேட்டி
ருக்கலாம் அநேக பாஷைகளில் தேர்ச்சியும்
ஆராய்ச்சியும் நிர்ணயத்

நகல்

௬ 112. ப. 152.

3
10-4-06

தி. பொன்னம்பலம் பிள்ளை

[illegible]

[illegible]

கடிதங்கள்
1906
30-11-1906

தி.க. VOL 'M'
p. 345-352.

(12)